3. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 58-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' ஒருநாளில் ஒரு பொருளுக்குமேல் பேரவையில் எடுத்துக் கொள்ளக்கூடாது'' என்ற 58ஆவது விதியைத் தளர்த்தி இன்று, 15—2—1983ஆம் தேதி பேரவையில் ''ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளலாம்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறை வேற்றப்பெற்றது.

4. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்.

திரு. அ. ரகுமான்கான் : சார் பாயின்ட் ஆப் ஆர்டர். நான் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்ன கேட்கப்போகிறீர்கள் என்பது எனக்குத் தெரிகிறது. இன்றைக்கு ஒத்திவைப்பு தீர்மானத்தில் பேராசிரியர் பேசப் போகிறார். நீங்கள் சொல்லவேண்டியதை பேராசிரியரிடம் சொன்னால், அவர் விளக்கமாகச் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் சொல்வதை ஒரு நிமிடம் கேட்டுவிட்டு உங்களுடைய தீர்ப்பைக் கொடுங்கள். எங்கள் கட்சியின் சார்பில் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேராசிரியர் அவர்கள் பேச இருக்கிறார்கள். ஆனால் நான் கூற விரும்புவது வேறு. இன்றைக்கு கடைசி நாள். ஒரு நிமிடம் அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முக்கியமான பிரச்சனையை ஒழுங்காகச் சொல்வதாக இருந்தால் ஒரு நிமிடம் அல்ல, 5 நிமிடங்கள்கூட கொடுக்கிறேன். ஆனால் நீங்கள் இப்போது கூறப்போவதுபற்றி உங்கள் கட்சியின் சார்பில் பேராசிரியர் பேச இருக்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS